**2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருட்கள்**

1. இம்மாநகராட்சியில் வார்டு எண்கள் 1 முதல் 48 வரை உள்ள காலிமனைகளுக்கு காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டு அவ்வப்போது உரிய காலிமனை வரிவிதிப்புகளுக்கு உரிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவையின்றி நடப்பு காலம் வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. காலிமனை வரிவிதிப்புகளுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட உடன் காலிமனை வரிவிதிப்பு இரத்து செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் காலம் வரை காலிமனை வரித்தொகையும் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், உரிய காலிமனை வரிவிதிப்புகள் உரிய கால அளவுகளில் இரத்து செய்யப்படாமல் தொடர்ச்சியாக கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது- இத்துடன் இணைப்பில் உள்ள பட்டியலில் கண்டுள்ள வார்டு எண்கள் 1 முதல் 48 வரை உள்ள காலிமனை வரிவிதிப்புகளை இரத்து செய்யவும் மேலும் நிலுவை தொகை ரூ.5,20,053/- மற்றும் நடப்பு தொகைகள் ரூ.4,16,306/- மொத்தம் ரூ.9,36,359/- ஐ வஜா செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது- (**ந.க.எண்.12185/2013/அ1**)

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

---

2. இம்மாநகராட்சி பகுதிகளில் சுற்றித் திரியும் பன்றிகளால் பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகள் மற்றும் நோய்த் தொற்றுகளை தடுக்கும் பொருட்டு, தினக்கூலி பணியாளர்களைக் கொண்டு மேற்படி பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.128/2015/எச்2)

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**3.** இம்மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் 2019-2020 (TURIP 2019-20) Providing BT Surface at Burma Colony road, Odukkam Road, Mengles road, from Junction of AMC road to Siluvathur road, Solaihall road, South Car street, Railway station road, Indra Nagar 1st and 3rd streets, R.V. Nagar Main road, Bodinaickenpatti road, Malapatti road in Ward Nos. 34, 18, 26, 25, 29, 30, 22, 17, 30 and 33 - PACKAGE – II பணிக்கு 26.11.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றன.

| | |
|---|---|
| 1) | திரு.சி.எஸ்.ராஜமோகன் |
| 2) | திரு.ஜி. உதயகுமார் |
| 3) | திரு.வி.பெரியசாமி |
| 4) | மெசர்ஸ். ஜவஹர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |

மேற்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளும் (Tender Scrutiny Committee) ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்டம் 27.11.2019 அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தொழில்நுட்பரீதியாக தகுதி வாய்ந்தவையாக தேர்வு செய்யப்பட்டது.

**1)** திரு.சி.எஸ்.ராஜமோகன் – **4.95** % மதிப்பீட்டை விட கூடுதல் 2

திரு.ஜி. உதயகுமார் – **14.64** % மதிப்பீட்டை விட கூடுதல்

ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.95% கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதால், மதிப்பீட்டை விட 4.95% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.எஸ்.ராஜ மோகன், ஒப்பந்ததாரருக்கு (Negotiation) விலைவிகிதத்தை குறைத்து தர 2.12.2019 ம் தேதி அன்று அறிவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டதில், ஷையார் கட்டுமானப் பொருட்களின் விலையேற்றம், பணியாட்களின் பற்றாக்குறை மற்றும் ஊதியம் அதிகமாக உள்ளதால் விலைவிகிதத்தை குறைத்து தர இயலாத நிலை உள்ளதாக தனது 5.12.2019ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவக 4.95 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.எஸ்.ராஜ மோகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 8486 / 2018 / இ4 )

<u>அலுவலக குறிப்பு</u>

1) ஷை பணிக்கு ரூ.235.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 17349 / 2019/இ3, நாள் 3.9.2019 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட4.95 சதவீதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.எஸ்.ராஜமோகன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.சி.எஸ்.ராஜமோகன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

---

4. இம்மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் 2019-2020 (TURIP 2019-20) Providing BT Surface at Belburk road, Sowrastrapuram scheme road, Central Road, Kamala Nehru Hospital road, North Kaliamman kovil street, in Ward Nos. 19, 20, 21, 3, 8, 7 and 9 - PACKAGE – I பணிக்கு 26.11.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றன.

| | |
|---|---|
| 1) | திரு.சி.எஸ்.ராஜமோகன் |
| 2) | திரு.ஜி. உதயகுமார் |

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் 27.11.2019 ஆம் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 2.12.2019 மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

1) திரு.சி.எஸ்.ராஜமோகன் – **4.95** % மதிப்பீட்டை விட கூடுதல் 2)
திரு.ஜி. உதயகுமார் – **10.00** % மதிப்பீட்டை விட கூடுதல்
ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 8486 / 2018 / இ4 )

<u>அலுவலக குறிப்பு</u>

1) ஷை பணிக்கு ரூ.265.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 17349 / 2019/இ3, நாள் 3.9.2019 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது-

2) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட4.95 சதவீதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.எஸ்.ராஜமோகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டைவிட கூடுதலாகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.சி.எஸ்.ராஜமோகன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**5.** இம்மாநகராட்சியில் குடிநீர் வடிகால் நிதி 2019-2020 ன் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு குடிநீர் வடிகால் நிதி 2019-2020 ன் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு 19.11.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் |
|---|---|
| 1. | WATAIR TECHNOLOGIES PVT LTD CHENNAI |
| 2. | M/s.Vishnu Priya Construction |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் WATAIR TECHNOLOGIES PVT LTD CHENNAI நிறுவனம் தொழில்நுட்பரீதியாக தகுதி வாய்ந்ததாக தொழில்நுட்ப கூர்ந்தாய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி திறந்து ஒப்புநோக்குப் பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனம் கீழ்க்கண்டவாறு தனது விலைப்புள்ளியினை அளித்துள்ளது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | WATAIR TECHNOLOGIES PVT LTD CHENNAI | 4.93% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.27500/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |

**(ந.க.எண்.11411 /2018/ இ 4)**

**அலுவலக குறிப்பு**

1. ரூ.27,50,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண்.1676, நாள் 9.10.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்தில் கொண்டும் 4.93% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள WATAIR TECHNOLOGIES PVT LTD CHENNAI, என்ற நிறுவனத்திற்கு விலைக்குறைப்பு செய்ய கடிதம் கொடுத்ததில் 4.93% சதவீதத்திலிருந்து 0.50% சதவீதம் குறைத்து செய்து தர சம்மதக் கடிதம் அளித்துள்ள மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தகாரர் WATAIR TECHNOLOGIES PVT LTD CHENNAI அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதி 2019-20 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

---

**6.** இம்மாநகராட்சியில் வருவாய் நிதி 2019-2020 ன் கீழ் பழைய அலுவலக கட்டிடத்தை கணினி வரி வசூல் மையமாக மாற்றும் பணிக்கு 07.11.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.ஆர். அனுசுயா தேவி | 4.95% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/- மதிப்புள்ள கருவூலக செலான் நகல் |
| 2. | திரு.பி.பழனிச்சாமி | 10.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/- மதிப்புள்ள கருவூலக செலான் நகல் |

( ந.க.எண்.11658 /2019/ இ3 )

**அலுவலக குறிப்பு**

1. ரூ.10,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். 1711 , நாள் 9.10.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளன.பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.95% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள

திருமதி.ஆர்.அனுசுயாதேவி,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தததாரர் திருமதி.ஆர். அனுசுயா தேவி, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதி 2019-20 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

---

**7.** திண்டுக்கல் மாநகராட்சியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பழைய அலுவலக கட்டிடத்தை கணினி வரி வசூல் மையமாக மாற்றும் பணிக்கு 7.11.2019 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திருமதி.ஆர்.அனுசுயா தேவி, ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. இப் பணியில் ஏற்கனவே கடந்த 15 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டிருந்த அலுமினிய frame மற்றும் MDF Sheet களால் ஆன தடுப்புகளை அகற்றி விட்டு புதியதாக அமைக்கப்பட்டு வருகின்றது. இப் பணியில் அகற்றப்பட்டுள்ள அலுமினிய frame மற்றும் MDF Sheet களால் ஆன தடுப்புகளை மாநகராட்சி அலுவலகத்தில் இருப்பு வைக்க போதிய வைப்பறைகள் இல்லாத காரணத்தினாலும், ஷை தடுப்புகளை மீண்டும் மாநகராட்சி அலுவலகத்தில் உபயோகப்படுத்த இயலாத நிலை உள்ளதாலும் அவற்றை ஏலம் விட மாமன்ற அனுமதி வேண்டடப்படுகின்றது. ( ந.க.எண்.16495 / 2017 / இ 4)

<u>**அலுவலக குறிப்பு**</u> மாமன்றம் அனுமதி வழங்கலாம்

---

**8.** திண்டுக்கல் மாநகராட்சியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏ.எம்.சி.சாலை, ரவுண்ட் ரோடு, திருநகர் மற்றும் முக்கிய சாலைகளில் சாலைகளை பேட்ஜ் வேலை செய்யும் பணிக்கு 7.11.2019 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு.பி.முருகேசன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இம் மதிப்பீட்டில் உள்ள வேலைகளை தற்போது 14வது மத்திய நிதிக் குழுத் திட்டம் 2019-20 ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளதால் இப் பணிக்குப் பதிலாக மாற்றுப் பணியாக நகரில் மிகவும் சேதமடைந்துள்ள பேருந்து நிலைய உட்புற தார் சாலையினை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதியும் திரு.பி.முருகேசன், ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பேருந்து நிலையப் பணியினை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

(ந.க.எண்.16495 / 2017 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

திரு.பி.முருகேசன், ஒப்பந்ததாரருக்கு அதே ஒப்பந்த விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.